www.tamilarangam.net

# ரஜினி காந்த்தின் நிகழ்ச்சியை பகிஷ்கரிப்போம்!

ஈழத் தமிழ் அகதிகளே!

தாயகத்தில் சிங்கள இராணுவம் ஆகாயத்திலிருந்து குண்டுமழை பொழிகிறது! பதுங்கு குழிகளுக்குள் நமது தாய் தந்தையர், சகோதரர்கள்!!

சிங்கள இனவெறி அரசு பொருளாதாரத் தடையை அமுல்படுத்தியுள்ளது! பட்டினிச்சாவை நோக்கி எமது உடன் பிறப்புக்கள்!!

தமது உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள நமது தாயகம் என்று முன்னர் நாம் பெருமை கொண்டாடிய தமிழகத்தில் தஞ்சமடைந்த நமது உடன்பிறப்புக்களை கழுத்தைப்பிடித்துத் தள்ளாத குறையாக பலவந்தமாக கப்பலேற்றுகிறது ஜெயலலிதா அரசு!

இதுவரை ஆயிரக்கணக்கான அகதிகளை பலவந்தமாக திருப்பி அனுப்பியபோது தமிழகத்திலிருந்து எந்தவொரு பலமான எதிர்ப்புக்குரலும் ஓங்கிஒலிக்கவில்லை. (சில தன்மானமுள்ள தமிழர்கள் குரல்கொடுத்தபோதிலும் அந்த ஒலி ஜெயலலிதா காதுகளுக்குப் போய்ச்சேரவில்லை.)

நினைத்தால் தமிழகத்தின் ஆட்சியையே பிடிக்கும் அளவுக்கு செல்வாக்குள்ள ரஜினி காந்த் இதுவரை இதனைக் கண்டுகொள்ளவேயில்லை.

தமிழகத்திலிருந்து நமது ஈழ அகதிகள் பலவந்தமாக அனுப்பப்படுகிறார்கள்! ஆனால் அங்குள்ள ஆநாதைகளுக்கு நிதிசேகரிப்பதற்காக ரஜினி காந்த் இங்குள்ள ஈழஅகதிகளிடம் நிதி சேகரிக்க வருகிறார்!

அநாதைகளுக்கு உதவ விரும்பினால் ஒரு படத்துக்கு பல கோடிகளை வாங்கும் ரஜினி காந்த் ஒரு படத்தை நடித்துக் கொடுக்கலாமே! அதற்காக நம்மையா சுரண்டவேண்டும்!!

தன்மானமுள்ள தமிழா சிந்தி!
நாம் கொடுக்கும் ஒவ்வொரு 200 பிராங்கு பணத்திலும் பல நூறு ஈழத்தமிழ் அநாதைகள் வயிறார உண்ணலாம் அல்லவா?

ஈழத்தமிழன் தன்மானமுள்ளவன் என்பதை நிரூபிக்க ரஜினியின் நிகழ்ச்சியை பகிஷ்கரிப்போம்!

– தன்மானமுள்ள தமிழன் சார்பில்
ஏ.ரி. செல்வம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரஜினியின் நிகழ்ச்சி அவசியமா?

ஈழத்தமிழ் மக்களே!

முதலில் ஈழத்தில் அல்லலுறும் அனாதைக் குழந்தைகளை பராமரிப்போம்!

பின்னர் உலகத்தில் உள்ள தமிழ் அனாதைக் குழந்தைகளை ஆதரிப்போம்!!

ரஜினியின் நிகழ்ச்சிக்கு கொடுக்கும் பணத்தை நமது உடன்பிறப்புக்களுக்கு அனுப்புவோம்.

– ஈழத் தமிழன்

www.tamilarangam.net

# ஈழ மண்ணில் பட்டினிச்சாவு இந்திய மண்ணுக்கு ஈழத்தவரிடம் நிதி சேகரிப்பு?

*ஈழமண்ணில் தினமும் பட்டினியால் அழிந்துவரும் தமிழினத்தின்உறவுகளே சிந்தியுங்கள்!*

*அண்டிவந்த ஈழ அகதிகளை விரட்டியடிக்கும் தமிழகத்தின் அடுத்த முதல்வா!*

*ஈழத்து அகதிகளிடம் நிதிசேகரிப்பது முறையா?*

*ஒரு படத்தை நடித்து அந்தப்பணத்தைக்கொண்டு தமிழகத்தில் அநாதைகளையே இல்லாமல் செய்ய முடியாதா?*

*நாங்கள் ஈழத்தமிழர்கள், உங்கள் ரசிகர்கள், எங்களுக்காய் என்ன செய்தீர்கள் இதுவரை?*

*தமிழகத்தில் அல்லலுறும் அகதிகளுக்கு உதவத்தான் வேண்டாம், பலவந்தமாக கப்பல்ஏற்றப்படும் ஈழ அகதிகளை திருப்பி அனுப்பவேண்டாம் என்று குரல்கொடுக்கக்கூடாதா?*

*'நான் ஒரு மனிதன்' என்று வள்ளி படத்தில் கூறியதை செயலில் காட்டலாமே!*

*—ரஜினி ரசிகன்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்